**நாவலபிட்டிய நகர சபை**
**கண்டி மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 27 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 20 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாவலப்பிட்டிய நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 பெறவேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 04 பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 27,369,710 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26,007,513 ஆகக் காணப்பட்டது.

#### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 03 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 15,190,558 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 13,321,641 தொகை 01 வருடத்தை மிகைத்த மீதிகளை அடக்கியுள்ளது.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் இத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | 13 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 111,312 தொகையும் சேவையை விட்டு விலகிச் சென்றிருந்த 16 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 319,488 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

--------------------------------------------

571(3) — 14 சந்தர்ப்பங்களிற்கு உரித்தான ரூபா 119,705 பெறுமதியான காலாவதியான வைப்புக்கள் தேறப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,165,013 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,801,779 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 8,363,234 இற்கான அதிகரிப்பு ஒன்று காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015.01.01 உள்ளவாறான நிலுவை | 2015.12.31 இல் உள்ளவாறான நிலுவை அறவீடுகள் | 2015 ஆண்டில் பட்டியலிடப்பட்டவை | ஆண்டில் பட்டியலிடப்பட்டவற்றிலிருந்தான அறவீடுகள் | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|
| வீத வரி | 12,670,524 | 3,521,808 | 13,013,291 | 8,707,218 | 13,454,789 |
| வாடகை | 4,569,920 | 3,028,510 | 13,702,371 | 12,627,787 | 2,615,994 |
| ஏனையவை | 871,782 | 49,300 | 156,300 | 63,000 | 915,782 |
| மொத்தம் | | | | | 16,986,565 |

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 10,986,565 தொகையான மொத்த வருமான மீதி நிலுவையாகக் காணப்பட்டது.

**2.2.2 வீத வரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டின் போதான நிலுவைத் தொகையில் அறவீடுகள் ரூபா 3,521,808 தொகையாக அதாவது 27 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஆ) பட்டியல் இடப்பட்டவற்றில் அறவீடுகள் ரூபா 8,707,218 தொகையாக அதாவது 66 சதவீதமாகக் காணப்பட்டது.

(இ) சபையின் ஆதனங்களை 05 வருடத்திற்கு ஒரு முறை மதிப்பீடு செய்து அதன் படி வீத வரி திருத்தப்பட வேண்டும். எனினும், 2009 ஆண்டிற்கான மதிப்பீட்டின் பிரகாரம் 2015 ஆண்டின் போது வரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. 2009 ஆண்டின் பின்னர் நாவலப்பிட்டிய நகரம் துரிதமாக அபிவிருத்தி அடைந்திருந்தமையால் 2015 ஆண்டின் போது வீத வரி திருத்தப்படாமையால் சபை கணிசமான அளவு வருமானத்தை இழந்துள்ளது.

**2.2.3 ஏனைய வருமானங்கள்**

(அ) இறைச்சிக் கடை குத்தகைக்கு வழங்குதல்

சபைக்கு உரித்தான இரண்டு மாட்டு இறைச்சிக் கடைகள் 2015 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்கு வழங்கப்படும் போது, நியாயமான காரணம் இன்றி 2014 ஆம் ஆண்டின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித் தொகையிலும் பார்க்கிலும் குறைவான மனுத் தொகை ரூபா 3,300,000 தொகையால் குறைக்கப்பட்டிருந்தமையால் சபைக்கு ஆகக் குறைந்தது ரூபா 3,300,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) மலசலகூடம் குத்தகைக்கு வழங்கல்

சொகுசுச் சந்தைத் தொகுதியில் உள்ள பொது மலசலகூட முறைமை சொகுசுச் சந்தைத் தொகுதி வியாபாரிகள் சங்கத்தினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 ஆகஸ்ட் மாதம் முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 75,145 தொகை 2016 மார்ச் 08 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) வாகனத் தரிப்பிடக் கட்டணம்

(i) முச்சக்கர வண்டி

சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள 18 முச்சக்கர வண்டி தரிப்பிடங்களில் 600 இற்கும் மேலான முச்சக்கர வண்டிகள்

பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 1,070,442 தொகையான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) வான்

---------

நகரத்தின் 04 வான் தரிப்பிடங்களில் 40 வண்டிகளிற்குக் கிட்டிய அளவிலானவை 06 மாதங்களிற்கு மேலாக கட்டணம் அறவிடப்படாதிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 528,849 தொகையான கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(iii) லொறி

-----------

நான்கு லொறி தரிப்பிடங்களில் பதிவு செய்யப்பட்டிருந்த 32 வாகனங்களில் 22 வாகனங்கள் 03 மாதங்களிற்கு மேலாக கட்டணம் அறவிடப்படாதிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 157,964 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. அந் நிலுவை மீதி அறவிடப்படுவதற்காக நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 170 (அ) ஆம் பிரிவின் படி, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஜயதிலக விளையாட்டரங்கின் சிற்றுண்டிச் சாலை குத்தகைக்கிடல்

----------------------------------------------------------------------------------------------------------

கேள்வி நடைமுறை பின்பற்றப்படாதும் உடன்படிக்கை ஏற்படுத்தப்படாமலும் 2012 - 2015 வரை விளையாட்டு சமூகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 222,310 தொகையான நிலுவை காணப்பட்டது.

(உ) வினோத வரி

-------------------------

நாவலப்பிட்டி நகரத்தில் உள்ள 02 திரையரங்குகளில் விநியோகிக்கப்பட்ட மற்றும் விநியோகிக்கப்படுவதற்கு இருந்த நுழைவுச் சீட்டுக்கள் முத்திரையிடப்பட்டிராது இருந்தமை தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டதுடன் சபை வினோத வரி அறவிடப்படுகையில் எவ்வித கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) காணிக் குத்தகை

-------------------------------

சபைக்கு உரித்தான காணி குத்தகையில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 360,581 தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இக் குத்தகை 06 மாதங்களிற்கு மேலாக நிலுவையாகக் காணப்பட்டது.

(எ) நீர்க் கட்டணம்

------------------------

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நீர்க் கட்டணமான ரூபா 914,482 தொகையாகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 752,492 தொகை 03 வருடங்களிற்கு மேலான காலமாக 40 பயனாளிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தவறான பட்டியலிடல் காரணமாக அறவிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.2.4 குத்தகை வாடகை**

சபைக்குரித்தான கடை குத்தகைக்கு வழங்கப்படுவதன் மூலம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 2,210,726 தொகை 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு காணப்பட்டதுடன் நிலுவையான கடை வாடகையை அறவிடுவதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 286,456 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 3,963,340 தொகையும் பெறவேண்டி இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 - 2014 ஆம் ஆண்டிற்கு உரித்தான ஆதனக் கடனிற்காக அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வட்டித் தொகையான ரூபா 522,855 மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பழைய நகர சபைக் கட்டிடம் அமைந்துள்ள பகுதியில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த புதிய வியாபாரத் தொகுதியின் அடிப்படை நடவடிக்கைகளிற்காக இது வரை ரூபா .1,000,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2016 ஏப்ரல் வரையிலும் அச் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபை ஆதனங்கள் நீண்ட காரமாக குத்தகைக்கு வழங்கப்படுவதற்கு சபைக் கட்டளைச் சட்டத்தின் 36(உ) (II) ஆம் பிரிவின் பிரகாரம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன்னங்கீகாரம் பெறப்பட்டு கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்பட்டு குத்தகையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய போதிலும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன்னங்கீகாரம் பெறப்படாது சபைத் தீர்மானத்தின் மூலம் சபை உர விற்பனை நிலையத்தையும் பாற் பண்ணையையும் குறித்த கால வரையறை குறிப்பிடப்படாது நீண்ட காலமாக குத்தகைக்கிடப்பட்டிருந்தது.

**3.2 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

2015 பெப்ரவரி 11 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, அரச நிதியைப் பயன்படுத்தி வெளிநாட்டுப் பயணத்தில் ஈடுபடுவது இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் உரிய நிறுவகத்திடம் இருந்த நிதி பிரதேச மக்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துமாறு குறிப்பிடப்பட்டிருக்கையில் முறையற்ற விதத்தில் சபை அமைச்சர்கள் மூவர் 2015 மே 08 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை சீனாவில் நடாத்தப்பட்ட கழிவு முகாமைத்துவ மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக ஒருவருக்கு ரூபா 160,000 படி ரூபா 480,000 தொகை 2015 மே 12 ஆம் திகதிய சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. 2015 மே 15 ஆம் திகதி சபை கலைக்கப்பட்டமையால் ஏற்கப்பட்ட தொகையில் சபைக்கு நலனைப் பெற முடியாதிருந்தது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

மீளாய்வாண்டின் மார்ச் மாதம் முதல் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டுப் பதிவேட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 02 வருமான விடபங்களில் 26 சதவீதம் முதல் 33 சதவீதம் வரையும் 05 செலவின விடபங்களில் 21 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்

அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல் நடைமுறையின் 4:2 உப பிரிவின் பிரகாரம் வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 உள்ளகக் கணக்காய்வு

இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2009 யூன் 09 ஆம் திகதிய டீகம்ஏ/2009/01 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கையின் படி, நிறுவகத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.5 சொத்து முகாமைத்துவம்

#### விளைவற்ற சொத்துக்கள்

சபையிடம் ரூபா 2,702,250 பெறுமதியான 02 வாகனங்களும் பழைய நகர சபைக் கட்டிடமும் 02 வருடங்களாக விளைவற்றுக் காணப்பட்டன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்